பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

39 ] சென்னை—ஞாயிறு, ஜனவரி 5, 1947. [ விலை. அணா. 2

## மின்னுவதெல்லாம் பொன் அல்ல

இரவில் கிஸான் ஆசிரமத்திலிருந்து முஸோரியைப் பார்த்தால் மலை மேலே மின்சார விளக்குகள் ஒரே வரிசையாக ஜொலித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அங்கே வீடுகள் அழகானவை. மோட்டார் ரோடுகளும் ரிக்ஷா ரோடுகளும் மின்சார விளக்குகள் நிறைந்தவை. கடைகளில் கீழ் நாட்டு நாகரீக வஸ்துக்களும் மேல் நாட்டு நாகரீக வஸ்துக்களும் குவிந்து கிடக்கின்றன. சினிமாக்களும், நடனசாலைகளும் ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த அழகான உலகத்தை சுத்தமாக வைக்கும் ஜனங்கள் இருண்டு ஈரமான அறைகளில் முடங்கிக் கிடக்கிறார்கள். அவர்களுடைய குடிசைக்குப் பக்கத்திலேயே பொதுஜனக் கக்கூஸ்களும் மூத்திர அறைகளும் காணப்படுகின்றன. அங்கே மின்சார விளக்கும் கிடையாது. ஸ்நான அறைகளும் கிடையாது. அங்கே காண்பதெல்லாம் அழுக்கும் ஆபாசமும் தான். துன்பமும் துயரமும் தான்.

கையால் வேலை செய்யாதவர்களும் அழுக்கைக் கையால் தொடாதவர்களுமான பணக்கார மக்களுக்கே ஸ்நான அறைகளும் தண்ணீர் குழாய்களும் முகம் கழுவ தொட்டிகளும் சோப்பும் துவாலைகளும் கிடைக்கின்றன. ஆனால் அவர்களுடைய கக்கூஸ்களையும் மூத்திரச் சட்டிகளையும் சுத்தம் செய்பவர்களும், சாக்கடைகளை கழுவுகிறவர்களும் அவர்களுடைய குப்பை கூளங்களை சுமந்து கொண்டு போகிறவர்களுமான தோட்டிகளுக்கோ குளிப்பதற்கும் துவைப்பதற்கும் குடிப்பதற்கும் 'வாளிடிப்போ" மட்டும் தான் கிடைக்கிறது. இதை வாசிக்கும் நண்பரே! இந்த "வாளிடிப்போ" என்றால் என்னவென்று தெரியுமா? தோட்டிகள் தங்கள் வேலைக்காக உபயோகப்படுத்தும் கக்கூஸ் பானைகளையும் மூத்திர வாளிகளையும் கழுவுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்ணீர்க் குழாயும் சாக்கடையும் தான்.

முஸோரியிலுள்ள பணம் படைத்த சீமான்களே! சீமாட்டிகளே! நீங்கள் வேலை செய்யாமல் சுகமாக காலம் கழிப்பதற்காகவே இந்த தோட்டிகள் என்னும் வகுப்பார் உண்டாயிருக்கிறார்கள். என்னோடு வந்து உங்களுடைய அழகான வீடுகளைச் சுத்தமாகவும் சுகமாகவும் ஆக்கித் தரும் மனிதர்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும் குடிசைகளைப் பாருங்கள்.

அழகான வீதியிலிருந்து இந்தச் செங்குத்தான குறுகிய பாதை வழியாகச் செல்வோம். அந்தப் பாதையில் விளக்குக் கிடையாது. அதில் இரவில் போவது கஷ்டம். இதோ பாருங்கள், வரிசையாயிருக்கும் இந்தக் குடிசைகளை. முஸோரியில் இது மாதிரி இருபது வரிசைகள் இருக்கின்றன. நீங்கள் மூக்கைப் பிடிக்கின்றீர்கள். ஆம் அந்தக் குடிசைகளுக்குப் பக்கத்தில் இருப்பவை பொதுஜனக் கக்கூஸுகள் தான். ஆனால் முதலில் இந்தக் குடிசைகளில் ஒன்றுள் எட்டிப் பாருங்கள். ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை அல்லவா? அங்கே ஜன்னல்கள் இல்லை. உள்ளே கால் எடுத்து வைக்கத் தயங்குகிறீர்களே. ஆனால் நீங்கள் உள்ளே வரத்தான் வேண்டும். அந்த ரொட்டியை மிதித்து விடாதீர்கள். கதவுக்குப் பின்னாலுள்ள அடுப்பில் அந்த அலங்கோலமான பெண் சமையல் செய்து கொண்டிருக்கிறாள். இந்தப் பக்கம் வாருங்கள். அடுப்புக்கு மேலே கட்டித் தொங்கும் படுக்கையைக் கீழே தள்ளி விடாதீர்கள். அந்த படுக்கை எப்படி எரிந்து போகாமல் இருக்கிறதோ அது ஆச்சரியந்தான். இப்பொழுது உங்கள் கண்கள் இந்த இருட்டில் பார்க்கப் பழகி விட்டன. அதனால் அந்த மூலையை உற்றுப் பாருங்கள். அங்கே படுக்கைகளும், பழைய பெட்டிகளும், கூடைகளும் கந்தல் துணிகளும் கிடக்கின்றன. அவைகளின் மேல் மனித உருவம் படைத்தவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அறையின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்று சொல்லுங்கள் பார்ப்போம். பதினைந்தடி நீளம் பத்தடி அகலம் தான். இதில் எத்தனை பேர் குடி இருக்கிறார்கள் தெரியுமா? ஆணும், பெண்ணும் குழந்தைகளுமாக பதினைந்து பேர். அடுப்பிலிருந்து வரும் புகை உங்களுக்கு மூச்சு முட்டுகிறது அல்லவா. கொஞ்சம் வெளியே போவோம் வாருங்கள். ஆனால் வெளியிலாவது நல்ல காற்று உண்டா. குடிசைக்கு வெளியே அதை அடுத்துத் தெரிவது யாது? பொதுஜன மூத்திர அறைகளும் அவற்றிற் கடுத்ததாக பொது ஜன கக்கூஸ்களும் தான். பார்த்தது போதுமென்று சொல்லாதீர்கள். இவ்வளவு தூரம் வந்தவர்கள் இறுதிவரைப் பார்த்து விடுங்கள். கக்கூஸுகளுக்கு அப்புறம் இருக்கிறதே அதுதான் "வாளிடிப்போ". அங்கே தான் தோட்டி வேலைக்குரிய வாளிகள் சுத்தம் செய்யப்படுகின்றன. உங்களுக்கு குடிக்க ஜலம் வேண்டுமா? இந்த ஜனங்கள் கொடுக்கக் கூடிய சிறந்த ஜலம் இதுதான். இங்கே தான் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஸ்நானம் செய்கிறார்கள், துணி துவைக்கிறார்கள், குடிக்க ஜலம் எடுக்கிறார்கள். உங்களுக்கு ஒரு மாதிரியாக இருக்கிறதல்லவா? போக வேண்டுமென்று தோன்றுகிறதல்லவா? சரி போவோம். ஆனால் வாளிடிப்போவிற்கு அப்புறமுள்ள ஒரு குடிசைக்குள் மட்டும் எட்டிப் பாருங்கள். உள்ளே கவனமாக கால் எடுத்து வையுங்கள். தளம் தாழ்ந்ததாக இருக்கிறது. "வாளிடிப்போ"விலுள்ள சாக்கடை ஜலம் ஊறி தளம் ஈரமாக இருக்கிறது. இங்கே ஒரு ஜன்னல் இருக்கிறது. ஆனால் அதன் பக்கத்தில் போக வேண்டாம். சுவர் கீறி இருக்கிறது. இன்னும் இரண்டொரு நாளில் விழுந்தாலும் விழுந்துவிடும்.

நாம் பார்த்தது போதும். உங்களுடைய அழகான தோட்டங்களுக்கு மத்தியில் சுத்தமாக பெருக்கி வைக்கப்பட்டிருக்கும் பங்களாக்களுக்குப் போவோம் வாருங்கள். செல்வம் நிறைந்து பளபள

வென்று மின்னும் முஸோரியின் மீது காணப்படும் இந்த கருமை நிறைந்த கறைகளைப் போக்கும்வரை இந்த குடிசைகளின் ஞாபகம் உங்கள் மனத்திற்கு அமைதியும் சமாதானமும்கொடுக்காமலிருக்குமாக!!

கிஸான் ஆசிரமம் — மீராபென்.

## ஆதிகால நாகரிகத்தை மேற்கொள்ளுங்கள்

சென்ற உலக யுத்தம் நடந்த காலத்தில் வெடி குண்டுகளை ஆகாய விமானத்திலிருந்து கீழே எறிந்து நகரங்களை நாசமாக்கினார்கள். அப்பொழுது ஜனங்கள் பூமிக்கடியில் தோண்டிய குழிகளில் பதுங்கிக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட எழுத்தாளர் ஒருவர் மனிதன் மறுபடியும் குகைக் கால நாகரிகத்தை மேற்கொள்கிறான் என்று கூறினார்.

ஒரு நிருபர் இந்திய நகரமொன்றில் ஜனங்கள் வாழ்ந்துவரும் வாழ்க்கை முறையை வர்ணித்து எழுதி இருக்கிறார். இந்தியாவிலுள்ள மக்களேனும் குகைக்கால நிலைமையை விட்டு வெகு தூரம் முன்னேறி இருக்கிறார்கள் என்பதும் கிறிஸ்துவுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன் ஆப்பிரிகாவிலும் மேற்கு ஆசியாவிலும் வாழ்ந்த ஆதிகால மக்களிடம் காணப்பட்ட நாகரிகத்தை அடுத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதும் நிருபருடைய வர்ணனையிலிருந்து தெரிகிறது. அவர் கூறுவதாவது :—

"ஜனங்களிடையே பரஸ்பரம் நம்பிக்கைக் காணப்படவில்லை. ஏதேனும் புதிதாகத் தோன்றி புதிதாக தொல்லை கொடுக்க ஆரம்பிக்காவிட்டால் நாம் இப்பொழுது வாழ்ந்து வருவது போலவே இனி மேலும் வாழ்ந்து வருவோம்.

வியாபார ஸ்தலங்களில் குறிப்பிட்ட இடங்களில் போலீஸார் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கடைகளுக்கு வருகிறார்கள். ஆனால் மணிக்கணக்காக நின்றுகொண்டு தான் சாமான்கள் வாங்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். லக்ஷக்கணக்கான ரூபாய் பெறக்கூடிய சாமான்கள் வாங்கவும் விற்கவும் படுகின்றன. ஒரு சமூகத்தைச் சேர்ந்த கூலிகள் சாமான்களை ஒரு குறிப்பிட்ட எல்லையின் அருகில் கொண்டுபோய் மற்றச் சமூகத்தைச் சேர்ந்த கூலிகளிடம் கொடுக்கிறார்கள். மாலையில் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு ஹிந்துக்கள் தங்கள் ஹிந்துஸ்தானத்துக்கும் முஸ்லிம்கள் தங்கள் பாகிஸ்தானத்துக்கும் போய்விடுகிறார்கள். இவ்விதமாக ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற சமூகத்தாருடைய இடத்துக்குள் நுழையாமலே வியாபார காரியங்கள் நடந்து வருகின்றன.

இவ்விதம் நடைபெறுவதால் வியாபாரம் கெட்டுப் போகிறது என்பதில் சந்தேகமில்லை. ஜனங்கள் தாராளமாக கடை வீதிகளில் நடக்க முடியவில்லை. கூலிக்கு ஆள் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறது.

ஆகவே நாகரிகமானது இந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமைக்கு முன்னேறவேண்டும். சந்தை நாட்களிலாவது இரண்டு சமூகத்தாரும் எதிர் சமூகத்தின் இடங்களுக்குப் போகக்கூடியதாக இருக்க வேண்டும். அல்லது இஸ்லாம் மதம் அரேபியாவில் தோன்றுவதற்கு முன்னால் நடந்ததுபோல இரண்டு சமூகத்தாரும் வருஷத்தில் ஒரு காலத்தை பகைமையில்லாத காலமென்று குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும். இந்தமாதிரிச் செய்தால் இப்பொழுதுள்ள நிலைமையைவிட அது சிறந்ததே யாகும்.

மகமது நபி நாயகம் அந்நிய நாட்டாருடைய உயிரையும், பொருளையும் பாதுகாப்பதற்காக மக்காவில் "ஹில்புல்பசுல்" என்னும் பாதுகாப்புப் படையை ஏற்படுத்தி இருந்தார். அதுபோல் பகைமையுள்ள காலங்களில் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பார் உள்ள இடங்களுக்குப் போகும்பொழுது அவர்களுக்கு பாதுகாப்புப்படை ஏற்படுத்தலாம். அது அடுத்தபடியான முன்னேற்ற மாகும்.

நாம் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டோம். இதை ஒழிக்கவேண்டுமானால் இரண்டு சமூகத்தாரும் பரஸ்பரம் நம்பவும் அதனால் வரும் அபாயங்களுக்குத் தயாராக இருக்கவும் வேண்டும். வியாபாரமெல்லாம் நம்பிக்கையின் பேரிலேயே நடந்து வருகிறது என்பதை வியாபாரிகள் அறிவார்கள். அப்படி நம்புவதால் அபாயம் நேரிடும் என்பதையும் அறிவார்கள். ஆயினும், நம்பிக்கையின் பேரிலேயே வியாபாரம் செய்து வருகிறார்கள். வெறும் வாக்குறுதியை நம்பி விலை யுயர்ந்த பொருள்களைக் கொடுக்கிறார்கள். இந்தமாதிரி நடப்பதால் பண நஷ்டம் ஏற்படலாம். இந்த நஷ்டத்தை பொருட்படுத்தாதது போலவே வியாபாரிகள் உயிர் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் இரண்டு சமூகத்தாரும் ஒன்று சேரும்படியாக வியாபாரம் செய்ய வேண்டும்.

கே. ஜி. எம்.

## சாந்தியும் சமாதானமும்

காந்தியடிகள் ஹிருதய பூர்வமாக பிரார்த்தனை செய்யும்படி ஜனங்களைக் கேட்டுக்கொள்கிறார். நோவாகாளி ஜில்லாவிற்குச் சென்று வீடு வாசல்களை இழந்து தவிக்கும் ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு உதவி செய்து வருகிறார். ஸ்ரீ ராம்பூரில் இருந்து கொண்டு ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சகோதர உணர்ச்சி ஏற்படும்படி தம்முடைய ஆறுதலான செல்வாக்கைச் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்.

இவற்றை எல்லாம் பாராட்டி பீஹார் மாகாணத்திலுள்ள ஹாஸரிபாக் என்னும் ஊரிலிருக்கும் திரு. ஓ. டபிள்யூ பிரான்ஸிஸ் என்பவர் காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அத்துடன் கல்கத்தாவில் அட்டூழியங்கள் நடந்த சமயத்தில் ஒரு கடவுள் பக்தர் எழுதிய கீழ்க்கண்ட ஆங்கிலச் செய்யுளையும் அனுப்பி இருக்கிறார். அந்தச் செய்யுளின் பொருள் வருமாறு :—

இறைவனே எங்களுடைய துக்கம் நிறைந்த தேசத்திற்கு சாந்தியும் சமாதானமும் அருளும்.

சண்டையும் சச்சரவும் உண்டாகி புரையோடும் புண்களில் உம்முடைய சஞ்சீவியான அஞ்சனத்தை ஊற்றி அருளும்.

கடவுளே! ஒற்றுமையால் உண்டாகும் ஆற்றல் எங்களுக்கு அதிகமாகத் தேவை. ஆனால் பகைமை பொறாமை நம்பிக்கையின்மை பதவி மோகம் ஆகியவற்றின் வேர்கள் எங்கள் மனத்தில் ஆழமாகச் சென்றிருக்கின்றன. மத வெறியால் ஒருவர் கழுத்தை ஒருவர் வெட்டுகிறோம்.

ஆண்டவனே! நாங்கள் எல்லோரும் உம்முடைய குழந்தைகள் அல்லவா? ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? இந்த உலக யாத்திரையை முடித்த பின் எல்லோரும் உம்மிடம்தானே வந்து சேருவோம். ஆதலால் இந்த உலகத்தில் நாங்கள் சகோதரர்களாக இருந்துகொண்டு எல்லோருக்கும் பொதுவாக ஏற்படக்கூடிய நோய் துன்பம் அறியாமை ஆகியவற்றை நீக்க பாடுபடவேண்டு மல்லவா?

கடவுளே! பசியால் வாடுகிறவர்கள் உம்மை நோக்கி பரிதாபகரமாக கதறுகிறார்கள். நோயால் சித்திரவதைச் செய்யப்படும் கோடிக்கணக்கான மக்களுடையத் துயரக்குரல் உம்முடைய காதுக்கு வந்து

எட்டுகின்றது. அகாலத்தில் மரணமாகும் மக்களின் துன்பக்குரலையும் நீர் அலக்ஷியம் செய்வதில்லை.

ஐயோ கடவுளே! இந்த துக்கம் நிறைந்த நாடு ஒரு பெரிய சுடுகாடாக ஆகிவிட்டது. பாரததேவியின் புத்திரர்களும் புத்திரிகளும் பலியிடப்படுகிறார்கள். கடவுளே! எல்லோரும் சேர்ந்து அன்பை ஹிருதயத்தில் ஏற்றிவைத்து உண்மையாக உழைத்தாலன்றி இந்த நாட்டை சந்தோஷமான நாடாகச் செய்ய முடியாது.

ஏன் மதமானது மக்களிடையே பிளவை உண்டாக்க வேண்டும்? அது எங்களை ஒன்றாகச் சேர்த்து உம்மிடம் கொண்டுவரவேண்டிய சாதனமல்லவா? ஆம் நீர் அன்பாக இருக்கிறீர். அதனால் அது அன்பு செய்யும்படி கற்பிக்க வேண்டியது அதன் பொறுப்பாகும்."

கே. ஜி. எம்.

## தேசியமாக்குதல்

பொதுஜன மந்திரி சபைகளிடம் ஏதோ கொஞ்சம் அதிகாரம் வந்திருக்கிறது. அப்படி அது வந்தது முதல் பலவகைத் தொழில்களையும் தேசியமாக்க வேண்டுமென்ற பேச்சு அதிகமாகக் கேட்கப்படுகின்றது. ஆனால் தேசிய மாக்குவதின் உண்மையான நோக்கம் இது என்பது இன்னும் பலர்க்கு தெளிவாக விளங்கவில்லை என்று இப்பொழுது நடைபெறும் விவாதங்களிலிருந்து தெரிகிறது. தேசிய மாக்குதல் என்பது சம்பந்தமாக கவனிக்கவேண்டிய சில முக்கியமான தத்துவங்களைக் கூற விரும்புகின்றேன்.

தேசியமாக்க வேண்டுமானால் உண்மையான அதிகாரம் ஜனங்களிடம் இருக்கவேண்டும். முதன் முதலாக நம்முடைய காரியங்களை நாமே நடத்திக்கொள்வதற்கு வேண்டிய அனுபவம் அதிகமாக இருக்க வேண்டும். இந்த அனுபவத்தைக் கிராமத்து ஜனங்கள் சரியாக அமைக்கப்படும் பஞ்சாயத்துக்களின் மூலம் தங்களுடைய பொதுக் காரியங்களைக் கவனித்துக் கொள்வதின் மூலம் பெறலாம். இப்படி அனுபவம் பெறுகிறவர்கள், பின்னால் ஜில்லாக் காரியங்களை நிர்வகிப்பார்கள். அதன்பின் மாகாணக் காரியங்களை நிர்வகிப்பவர்களாகவும், சட்டங்களை இயற்றுகிறவர்களாகயும் ஆவார்கள். இந்த விதமாக நல்ல அஸ்திவாரத்தின் மேல் ஒழுங்காக நடத்தப்படும் மாகாண நிர்வாகமானது மத்திய அரசாங்கத்தைக் கிராமங்களின் நன்மைக்கு உகந்தவாறு நடக்கும்படிச் செய்யக் கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

இந்த விதமாக பயிற்சிபெறும் தேச பக்தர்கள் கோடிக் கணக்கான மக்களின் நன்மையைத் தேடுவதையே தங்கள் பிரதம லக்ஷியமாகக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தேசத்தின் அரசாங்கத்தை நிர்வகிக்கும் பொழுதுதான் உண்மையான தேசிய அரசாங்கம் ஏற்பட்டதாகக் கூற முடியும். அப்பொழுதுதான் தேசிய மாக்குதல் என்பது கோடிக் கணக்கான மக்களின் நன்மைக்கு உகந்ததாக அமையும்.

இப்படி கிராமத்தை அடிப்படையாகக் கொண்டும், கிராமத்துக்கு கட்டுப்பட்டதாகவும் இருக்கக் கூடிய மத்திய அரசாங்கம் ஏற்படாத வரை தேசிய மாக்குவதால் ஏழை மக்களுக்கு நன்மை ஏற்படாது. பணமுடையவர்கள் பண மில்லாதவர்களை இப்பொழுதை விட அதிகமாகச் சுரண்டுவார்கள். உதாரணமாக இப்பொழுது ஆகாய விமான போக்கு வரத்தை தேசிய மாக்கவேண்டு மென்ற பேச்சு உண்டாகி இருக்கிறது. இப்பொழுது அவைகளை கிராமத்து ஜனங்கள் உபயோகிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவை அவசியமுமில்லை. இப்பொழுது அவைகள், பணக்காரர் வசமே இருக்கின்றன. அவர்கள்தான் அவற்றை உபயோகித்து வருகிறார்கள். ஆதலால் ஆகாய விமானங்களை தேசியமாக்கி சர்க்கார் மேற்பார்வையில் நடத்துவதானால் அவைகளை பணக்காரருக்குச் சுலபமாக கிடைக்கும்படி செய்வதற்காகச் சர்க்கார் தங்கள் பணத்தையும் நேரத்தையும் செலவு செய்ய வேண்டியதாகும். மற்ற பணக்காரர்கள், ஆகாய விமான போக்கு வரத்தை நடத்துவார்கள். அவர்கள் ஆகாய விமான நிலையங்களைக் கட்டுவதற்கும், பல ரோடுகளை போடுவதற்கும் தேசிய சர்க்கார் மேற்பார்வை என்ற வியாஜத்தின் மேல் சர்க்காருடைய உதவியைப் பெற்றுத் தங்கள் காரியங்களை எளிதாகச் சாதித்துக் கொள்வார்கள். சர்க்காரிடம் உள்ள பணங்களெல்லாம் ஏழைகளுக்கு நன்மை செய்வதற்காகவே உபயோகப் படுத்தப்பட வேண்டும். அவைகளை ஆகாய விமானப் போக்குவரத்தின் அபிவிருத்திக்காக உபயோகிக்கக் கூடாது. ஆகாய விமானப் போக்கு வரத்தை இப்பொழுது உள்ளது போலவே முதலாளிகள் நடத்தி வரட்டும். அந்த முதலாளிகள் பணக்காரர்கள். அவர்கள் மற்ற பணக்காரர்களைச் சுரண்டுவார்கள். கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய சர்க்கார் ஏற்படுகிற காலத்தில் இத்தகைய வசதிகளை தேசிய மாக்கிக் கொள்ளலாம்.

ஜே. ஸி. குமரப்பா.

## எது பெருமை?

"புளூடார்க்" என்னும் ஐரோப்பிய பழம் புலவர் பல பெரியார்களின் சரித்திரங்களை மிக அழகாக எழுதி இருக்கிறார். அதை அறிஞர்கள் எல்லோரும் அதிகமாகப் புகழ்கிறார்கள். அவர் "கேட்டோ" என்னும் இதாலியப் பெரியாரைப் பற்றி எழுதியுள்ள சரித்திரத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் ;—

"மேனியஸ் க்யூரியஸ்" என்னும் ரோம் தேசத்து சேனாதிபதி மூன்று முறை தம்முடைய வெற்றிக்காக ஜனங்களால் கொண்டாடப் பட்டவர். அவருக்கு கிராமத்தில் ஒரு சிறு வீடு இருந்தது. அது "கேட்டோ"வினுடைய பண்ணைக்கு அருகில் இருந்தது. "கேட்டோ" அடிக்கடி அங்கே செல்வார். அந்த வீடு சாதாரணமாக இருப்பதையும் அங்குள்ள நிலம் மிகக் குறைவாக இருப்பதையும் கண்டார். என்ன? "ரோம் தேசத்து மிகப் பெரியார்களில் ஒருவர், மிகுந்த போர் வீரமுள்ள ஜாதியார்களை ஜெயித்தவர். இத்தாலியி லிருந்து பிரஸ் என்பவனை துரத்தியவர். மூன்று முறை மகா ஜனங்களால் பாராட்டப்பட்டவர். இத்தகைய குடிசையி லிருந்து கொண்டு இவ்வளவு சிறிய நிலத்தில் பயிர் செய்து கொண்டு திருப்தியாக இருக்கிறாரே" என்று எண்ணினார்.

ஒருநாள் சமிதி என்னும் ஊரிலிருந்து ராஜ தூதர்கள் வந்திருந்தார்கள். அப்பொழுது க்யூரியஸ் கிழங்குகளை அடுப்பில் வேக வைத்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட தூதர்கள் அவருக்குத் தங்கத்தை காணிக்கையாகக் கொடுக்க விரும்பினார்கள். அவர் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். அவர் கூறியதாவது :—

"இந்தக் கிழங்குகளை இரவில் உண்பேன். எனக்குத் தங்கம் எதற்காக? தங்கத்தை வைத்துக் கொள்வதை விட தங்கம் உடையவர்களை வெற்றி கொள்வதே அதிகப் பெருமை தருவதாகும்."

தமிழ் ஹரிஜன்

ஜனவரி 5, ஞாயிறு 1947

## வெளிச்சம் தெரிய ஆரம்பம்

வங்காள சர்க்கார், கிழக்குவங்காளத்திலுள்ள அகதிகளுக்கு உதவி செய்வது சம்பந்தமாகமேற் கொண்டுள்ள கொள்கையை விளக்கிக் கூறுமாறு மகாத்மா காந்தி யடிகள் வங்காள பிரதம மந்திரி சுகர்வர்த்திக்கு கடித மெழுதி இருந்தார்.

பிரதம மந்திரி சுகர்வர்த்தி ரேடியோவில் கீழ்க் கண்டவாறு கூறினார்:—

"மகாத்மா காந்தி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நல்ல உறவு ஏற்படுத்த விரும்புகிறார். வங்காள அரசாங்கத்தின் நோக்கமும் அதுதான். மகாத்மாகாந்தியின் நோக்கம் வங்காளத்தில் மட்டுமின்றி இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் நிறைவேற வேண்டுமென எண்ணுகிறேன். அந்தப் பகுதிகளில் சிறுபான்மை வகுப்பார் தங்கள் உயிருக்கு அஞ்சி வாழ்ந்துகொண் டிருக்கிறார்கள். ஊரைவிட்டு ஓடி வந்தவர்கள் பாதுகாப்புக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படாததால் திரும்பிப்போக பயந்து கொண்டிருக்கிறார்கள்."

டிஸம்பர் 27-ம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு, முன்வராத அளவு அதிகமான ஜனங்கள் வந்திருந்தார்கள். தூரத்திலுள்ள இடங்களிலிருந்து கூட ஆணகளும் பெண்களும் குழந்தைகளும் வந்து குழுமி இருந்தார்கள். கூட்டத்தில் பல முஸ்லிம்களும் காணப்பட்டார்கள். பண்டிதநேருவை பார்க்க விரும்பியே அவர்கள் வந்திருந்தார்கள்.
காந்தியடிகள் கூறியதாவது :—

"நான் என்னைச் சூழ்ந்து இருட்டு இருந்து கொண்டிருப்பதாகக் கூறியது பலர்க்கு விளங்கவில்லை என்று ஒரு நண்பர் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார். என்னுடைய திட்டத்தின் மூலமாக ஒளி வீச ஆரம்பித்திருப்பதாக ஜனங்கள் எண்ணுகிறார்கள் என்றும் அக்கிரமங்கள் நடந்த பிரதேசத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை மெதுவாக உண்டாய்க் கொண்டிருப்பதாக அறிகுறிகள் தோன்றுகின்றன என்றும் அந்த நண்பர் கூறினார். சமூக ஒற்றுமையை உண்டாக்குவதற்காகச் செய்யவேண்டிய வேலை இது வென்று ஜனங்களுக்கு தெரிந்திருப்பதாகவும் சொன்னார். ஆனால் அவரும் அவரைப்போல் எண்ணுகிறவர்களும் என் கருத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. என்னைச் சூழ்ந்து இருக்கும் இருட்டைப் போன்ற இருட்டு எந்தக் காலத்திலும் என்னைச் சூழ்ந்து இருந்ததில்லை. என்னுடைய அஹிம்சை ஜீவாதாரமான சோதனைக்கு உள்ளாகி இருக்கிறது. என்னுடைய நோக்கம் நிறைவேறும்வரை வெற்றி பெற்றுவிட்டதாகச் சொல்ல முடியாது.

விடியப்போகும்பொழுதே இருட்டு அதிகமாயிருக்கும் என்பது உண்மையே. அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது. ஆயினும் தூரத்திலுள்ள நண்பர்கள் அருணோதய வெளிச்சத்தை காண்பதாகக் கூறிய போதிலும் என்னைச் சுற்றி இருள் சூழ்ந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

பல வருஷங்களுக்கு முன் என்னுடைய நண்பர் ஒருவர் பதஞ்சலியின் யோகசூத்திரம் என்னும் நூலை எப்பொழுதும் தமது சட்டைப்பையில் வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாதபோதிலும் அந்த நண்பர் ஏதேனும் ஒரு சூத்திரத்தின் அர்த்தத்தைப் பற்றி என்னிடம் ஆலோசிப்பதற்காக அடிக்கடி வருவார். பரிபூர்ணமான அஹிம்சை ஏற்படுமானால் சூழ் நிலையிலுள்ள பகைமையும் தீமையும் அடியோடு ஒழிந்து போகுமென்று ஒரு சூத்திரம் சொல்கிறது. அத்தகைய நிலைமை இன்னும் உண்டாகவில்லை. ஆதலால் என்னுடைய அஹிம்ஸை இன்னும் இந்தச் சோதனையில் வெற்றி பெறவில்லை என்று கூற வேண்டியவனாயிருக்கிறேன். என்னைச் சுற்றி இன்னும் இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது என்று கூறியதற்கு இதுதான் காரணம்.

ஆயினும் வங்காள பிரதம மந்திரியின் ரேடியோ பிரசங்கத்தைக் கேட்ட பின் ஒரு சிறிது இருட்டினூடே வெளிச்சத்தைக் காண்பதாகத் தோன்றுகிறது.

வங்காளப் பிரதம மந்திரி நான் நடந்துபோகும் பொழுது எனக்கு பாதுகாப்பளிக்கப் போவதாக கூறி இருக்கிறார். பாதுகாப்பு அளித்தால் அவர் தமது கடமையைச் செய்தவரேயாவார். இராணுவமும் போலீசும் என்னுடைய குடிசையைச் சுற்றி நிறுத்தப்பட்டிருப்பதை அறிவேன். சில சமயங்களில் பரஸ்பரம் முகமன் கூறிக் கொள்ளவும் செய்கிறோம். அவ்வளவு தான் பிரதம மந்திரி செய்ய முடியும். அதற்கு மேல் கடவுள்தான் பாதுகாக்க வேண்டும்.

நான் குறைந்த நண்பர்களுடனேயே நடந்து போக எண்ணி இருக்கிறேன். முஸ்லிம் நண்பர்களுடைய வீட்டில் தங்கவே உத்தேசித்திருக்கிறேன் என்னுடைய தேவைகளைக் குறைத்து விட்டேன். ஆகையால் பரம ஏழைகளாக உள்ள கிராம வாசிகளுங் கூட எனக்குத் தேவையானதை கொடுக்க முடியும். முஸ்லிம்கள் விஷயத்தில் என்னுடைய மனத்தில் அன்பும் நட்பும் தவிர வேறு எதுவும் கிடையாது என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகவாவது நான் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் போக விரும்புகிறேன். என்னுடைய பிரயாணத் திட்டம் இரண்டொரு நாட்களில் முடிவு செய்யப்படும். திட்டம் தயாரானதும் அதை வங்காள பிரதம மந்திரிக்கு தெரிவிப்பேன். அவருக்குத் தெரியாமல் எதையும் நான் செய்ய விரும்பவில்லை."

### நம்பிக்கை உறுதியாதல்

ஹரிஜன் வாசகர்கள் தினசரி பத்திரிகைகளில் மகாத்மா காந்தி யடிகள் கிழக்கு வங்காளத்தில் செய்து வரும் வேலையை கவனித்து வருகிறார்கள் என்று நம்புகிறேன்.

அவர் அங்கு போயிருக்கும் நோக்கம் தேசமக்கள் இழந்துவிட்ட அஹிம்ஸா நம்பிக்கையை திரும்பப் பெறும்படி செய்வதற்காகவேயாகும்.

ஜனங்களிடம் நல்லதோ கெட்டதோ அநேக வழக்கங்கள் குடிகொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் மத சம்மதமானவை என்றே எண்ணுகிறார்கள். வளையலையோ குங்குமத் திலகத்தையோ உச்சிக்குடுமியையோ தாடியையோ இழந்துவிட்டால் ஆற்றொணாத்துயரம் அடைந்துவிடுகிறார்கள். ஆனால் மதத்திடம் இருக்கவேண்டிய உண்மையான நம்பிக்கையோ ஜனங்களிடமிருந்து மறைந்துபோய் விட்டது. எதை நம்புகிறோமோ அதற்காக தனித்து நிற்கவும் தேவையானால் உயிர் துறக்கவும் தயாராக இருப்பதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்காவிட்டால், அந்த நம்பிக்கையால் என்ன பயன்? நம்முடைய நம்பிக்கையை அநியாயமாகவும் ஆணவமாகவும் நசுக்க வரும் எந்த சக்தியையும் எதிர்ப்பதற்கு வேண்டிய சுயமரியாதையும் யாராலும் வெல்லமுடியாத மனோதைரியமும் உண்டாக்குவதே உண்மை

சாத்தான் நேரில் போகாத இடங்களுக்கு மதுவை அனுப்புகிறான்—யூதப் பழமொழி

யான நம்பிக்கையின் லக்ஷியமாகும். அத்தகைய சக்தியை உண்டாக்க முடியாவிட்டால் அப்பொழுது அது சௌகரியமான காலத்தில் அனுஷ்டிக்கக்கூடிய அர்த்தமற்ற மதானுஷ்டானங்களாக இழிந்த நிலையை அடைந்துவிடும். அந்த வழக்கங்கள் எவ்வித பயனும் அற்றவை. நாளடைவில் மனச் சோம்பலால் ஜனங்கள் அவைகளை தாங்களாகவே விட்டுவிடுவார்கள். இப்பொழுது நாகரிகமான ஆண்களும் பெண்களும் வளையலையும் குங்குமத் திலகத்தையும், உச்சிக் குடுமியையும், தாடியையும், நெற்றியிலிடும் மதச் சின்னங்களையும் விட்டுவிட்டார்கள். ஆதியில், உறுதியான ஆத்ம நம்பிக்கைதான் இந்த வழக்கங்களை வாழ்வின் புறச் சின்னங்களாக சிருஷ்டித்தது. ஆனால் ஜனங்கள் அகத்திலுள்ள நம்பிக்கையை இழந்துவிட்டதால் புறத்திலுள்ள சின்னங்களை மட்டும் வைத்துக் கொண்டிருப்பதால் ஆத்ம லக்ஷணம் அணுவளவும் உண்டாகப் போவதில்லை.

ஆகவே இழந்துபோன நம்பிக்கையைத் திரும்பப் பெறுவதே அடிமைகளின்; அதிலும் விசேஷமாக பெண்களின் முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. தீக்கொளுத்துதல் கொள்ளை இடுதல் கடத்திச் செல்லுதல் கற்பழித்தல் பலாத்காரமாக மத மாற்றம் செய்தல், போன்ற துர்கிருத்தியங்கள் உலகத்தில் இப்பொழுது நடக்கும் புதிய சம்பவங்கள் அல்ல. இந்தியாவிலும்கூட இவைகள் பல சமயங்களில் நடந்திருக்கின்றன. பஞ்சாபில் ஜாலியின்வாலா படுகொலை நடந்த வாரத்தில் போலீசும் ராணுவமும் செய்த அட்டூழியங்கள் கிழக்கு வங்காளத்தில் நடந்த அட்டூழியங்களைவிட மோசமானவைகள் அல்ல. பஞ்சாபில் கஷ்டப்பட்டவர்கள் சாதுவான வங்காளி ஹிந்துக்களல்லர். போர் வீரமுடைய ஹிந்துக்களும் முஸ்லிம்களும், சீக்கியர்களுமான பஞ்சாபிகளே ஆவார். 1942, 1944-ல் அடக்குமுறைக் கொடுமைகள் நடந்தபொழுது பெண்களுக்கு இதே விதமான மானக் கேடுகள் செய்யப்பட்டன. அவை "சீமூர்" என்னும் இடத்தில்தான் நடந்தன என்று எண்ண வேண்டாம். இன்னும் அநேக இடங்களில் நடந்திருக்கின்றன. திரு. பன்ஸாலி உண்ணாவிரதமிருந்ததால் "சீமூர்" பிரசித்தி அடைந்தது அவ்வளவுதான்.

இப்படி அட்டூழியங்கள் நடந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கவனித்தால் பெண்களைப் பாதுகாக்க ஆண்களுக்கு மனோதைரியமில்லையே தவிர உடல் பலமிருக்கத்தான் செய்தது என்பது தெரியவரும். உடல் பலம் இல்லாவிட்டாலும் மனோதைரியமிருந்தால் பெண்களும் அக்கிரமிகளை, எதிர்த்து நிற்க முடியும். ஆனால் பெண்களுக்கும் அந்த மனோதைரியமில்லை என்று தெரிகிறது. ஆண்களுக்கு உடல் பலமில்லாவிட்டால் பெண்களுக்கு எப்படி உடல் பலமிருக்கப் போகிறது. ஆண்களுக்கு மனோதைரியமில்லாவிட்டால் அவர்களுடைய பெண்களை ஆண்டவன்தான் காப்பாற்ற முடியும் என்பது தெளிவாகும். ஒருவராலும் காப்பாற்ற முடியாது என்று கூறுவதற்குப் பதிலாகவே நான் ஆண்டவன்தான் காப்பாற்ற முடியும் என்று கூறுவதாக எண்ண வேண்டாம். கொடுங்கோல் மன்னர்கள் அழிக்க விரும்புவதும் லக்ஷியத்துக்காக உயிர்துறப்போர்களைச் சிருஷ்டிப்பதுமான ஆத்ம சக்தி ஒன்று இருக்கின்றது. அதுதான் அவர்களைக் காப்பாற்ற முடியும் என்றே கூறுகிறேன்.

காந்தியடிகள் இத்தகைய அசையாத நம்பிக்கையை பெறும்படி செய்வதற்காகவே தம்முடைய வாழ்வு முழுவதையும் அர்ப்பணம் செய்திருக்கிறார். அவர் 25 வயது வாலிபராயிருந்தபொழுது ராஜகோட்டிலிருந்த அரசியல் ஏஜண்டு அவரை அவமானத்துக்குள்ளாக்கினார். அன்றுதான் காந்தி அடிகள் நம்பிக்கை இழந்துவிட்டதை முதல் முதலாக உணர்ந்தார். அவமானத்தை தனியாக கவனித்தால் அது ஒரு சிறு அற்ப விஷயமாகும். ஏதோ ஒரு உத்தியோகஸ்தர் முட்டாள் தனமாக முரட்டுத் தனமாக நடந்து கொண்டாரென்று தள்ளிவிடக் கூடியதாகும்.

இந்த விஷயத்தைக் கேட்டபொழுது பம்பாயின் கேசரி என்று புகழ்பெற்ற சர் பெரோஷா மேத்தா கூட மேற்கொண்டு ஒன்றும் செய்ய வேண்டாம் அதை மறந்து விடுங்கள் என்றே யோசனை சொன்னார். காந்தியடிகள் அப்படியே செய்தார். அந்தச் சமயம் அவரால் வேறு எதுவும் செய்திருக்க முடியாது. அதன்பின் அவர் தம்முடைய வாழ்வில் அதைவிட பெரிய அவமானங்களை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர் அதை மறக்கவில்லை. அதை எதிர்ப்பதற்கான சரியான வழி என்ன என்பதை அன்று முதல் தேட ஆரம்பித்தார்.

தென் ஆப்பிரிகாவிலிருந்தபொழுது ஒருநாள் பொது ஜன கோச்சு வண்டியில் ஏறியபொழுது அதன் வெள்ளைக்காரக் கண்டக்டர் கருப்பு மனிதன் ஏறக்கூடாது இறங்கு என்று சொன்னான். காந்தியடிகள் இறங்க மறுக்கவே அவன் அவரை பலமாக அடித்தான். அப்பொழுதுதான் அவருக்கு அவர் தேடியவழி புலனாயிற்று. எப்படி தேங்காயையடித்து உடைத்தால் உள்ளேயுள்ள இனிய பருப்பு வெளிப்படுமோ அதுபோல் அந்தக் கண்டக்டர் அடிக்க அடிக்க அவருடைய அகத்தேயிருந்த ஆன்மசக்தி வெளிப்படலாயிற்று. ஒருவனை அடிக்கலாம், கொல்லலாம், ஆனாலும் அவன் இஷ்டப்படாவிட்டால் அவனைப் பணியவைக்க முடியாது என்பதைக் கண்டார். மரணம் சித்திரவதை பொருள் நஷ்டம் முதலிய பயங்கள்தான் மனிதனை தன்னுடைய சுதந்திரத்தையும் கொள்கையையும் விட்டுவிடும்படியாகச் செய்கின்றன. அந்த பயத்தை மட்டும் நீக்கிவிட்டால் தனித்து நின்றாலும் ஒரு சேனைக்குள்ள பலத்தைப் பெற்றுவிட முடியும். அந்த பயமட்டு மிருக்குமானால் பயிற்சி பெற்ற போர் வீரர்கள் கூட எவ்விதமான மானபங்கத்தையும் வாய் பேசாமல் ஏற்றுக்கொள்வார்கள். வங்காளத்திலும் பீஹாரிலும் உள்ள ஜனங்கள் எப்படி பயந்து போய் ஓடினார்களோ அதுபோல் பயந்து ஓடவும் செய்வார்கள்.

காந்தியடிகள் இவ்விதமாக ஆத்ம நம்பிக்கையை கண்டு பிடித்ததும் அதை தென் ஆப்ரிக்காவிலுள்ள ஆண்களிடமும் பெண்களிடமும் உண்டாகும்படி செய்தார். அது விஷயத்தில் அவர் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றார் என்பதை அவருடைய விரோதியான தளபதி ஸ்மட்ஸ் கூறுவதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். தளபதி கூறுவதாவது :—

"காந்தி ஒரு புது முறையைக் காட்டினார். அவர் அதைப் பிறகு இந்தியாவில் அனுஷ்டித்துக் காட்டி உலக பிரசித்தி அடையும்படி செய்திருக்கிறார். எந்தக் காரியத்தையும் முன் கூட்டித் திட்டம் போட்டு அந்தத் திட்டப்படியே நடத்துகிறார். நான் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டிய பதவியிலிருக்கிறேன். பொது ஜனங்களுடைய ஆதரவில்லாத சட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டிய கேவலமான நிலைமையில் இருக்கிறேன். கடைசியில் தோல்வி அடைந்து சட்டத்தை ரத்து செய்கிறேன். அவரே வெற்றி அடைந்தார். இது மட்டுமன்று. அவர் எது செய்தாலும் மனிதப் பண்பு உடையதாகவே இருக்கின்றது. சிறையிலிருந்த பொழுது ஒரு ஜோடி நல்ல

மதவெறியர் ஆப்பிரிக்கா எருமை போல்வர்—நேரேதான் பார்ப்பர், பக்கங்களில் திரும்பார்—பாஸ்டர்

செருப்புகள் தைத்தார். விடுதலை பெற்றதும் அவற்றை எனக்கு அளித்தார். நான் பல வருஷங்களாக அதை உபயோகித்தேன்''

''புதிய முறை'' என்றதும் சாத்விக சட்டமறுப்பு ஒத்துழையாமை வரிகொடாமை, போன்ற விஷயங்கள் என்று எண்ணிவிடலாகாது. அப்படி எண்ணினால் அது புஸ்தகத்தை விட்டு அதன் அட்டையைப் போற்றுவது போல்வதாகும். குங்குமத் திலகமும் வளையல்களும் ஒரு பெண்ணை சுமங்கிலி என்று காட்டுதற்குரிய புற சின்னங்களாக இருக்கின்றன. அதுபோல்தான் சாத்விக சட்டமறுப்பு போன்ற விஷயங்களும் வெறும் புறச்சின்னங்களேயாகும். சாத்விக சட்ட மறுப்பு முறைமட்டுமே குதிரை மீது ஏறிய போலீஸார் சவுக்கால் அடித்தாலும் தேசிய கொடியை விட்டு விடாமல் பிடித்துக் கொள்ளக் கூடிய சக்தியை பம்பாயிலுள்ள பெண்களுக்கும், போலீஸ்காரர்கள் தலையைப் பிடித்து இழுத்து அடிமேல் அடி அடித்தபோது அதை தாங்கிக்கொள்ளக் கூடிய சக்தியை பேர்ஸாதிலுள்ள பெண்களுக்கும் கொடுத்திருக்க முடியாது. இது மாதிரி எத்தனையோ உதாரணங்கள் கூறலாம். ஜனங்கள் தங்களுடைய ஆத்ம சக்தியை உணராததால் தான் அவர்கள் மற்ற சந்தர்ப்பங்களில் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் மான பங்கங்களையும் வாய் பேசாமல் அநுபவித்து வந்திருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தார் ஏராளமானவர்களாகவும் மற்றச் சமூகத்தார் வெகு சிலராகவும் வசிக்காத கிராமத்தை காண முடியாது. வெகு சிலராக உள்ளவர் மதத்தை மாற்றிக் கொள்ளப் பிரியப்படா விட்டால் தங்கள் கிராமத்தை விட்டு வெளியேறி விடவேண்டியது அவசியம் தானே? மதத்தை மாற்றிக்கொள்ள விரும்புகிறவர்கள் வசிக்குமிடத்தை மாற்றிக்கொள்வதும் அவசியமா? அப்படியானால் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு மதத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்குமிடத்திற்கு போகவேண்டுமானால் போலீஸ் பாதுகாப்புடன் தான் செல்லவேண்டும் என்று அர்த்தபடுமல்லவா? ஆம் என்று சொன்னால் மனித கௌரவ உணர்ச்சியுள்ள மனிதன் எவனும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. பசுக்களும் எருமைகளும் கூட ஒன்றாக மேய்ந்து ஒன்றாக படுத்துக் கொள்கின்றன. புறாக்கள் சிட்டுக்குருவிகள் போன்ற பக்ஷிகள் கூட பயமில்லாமல் ஒன்றாக மேய்கின்றன. அப்படி இருக்க மனிதன் மிருகங்களையும் பக்ஷிகளையும் விட கேவலமான நிலைமையை ஏற்றுக் கொள்ள சம்மதிப்பானா? இது விஷயத்தில் ஏதோ ஒரு தவறு இருக்கிறது. அதைத் திருத்தி ஆகவேண்டும். பல மதங்களைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் எல்லோரும் பயமில்லாமல் பிறர் பாதுகாப்பில்லாமல் வசிக்கக் கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும். தனி மனிதனுக்கு அப்படி வசிப்பதற்கு மனோதைரியம் இல்லாவிட்டால் அவனுடைய ஆத்ம நம்பிக்கையில் ஏதோ ஒரு தவறு இருக்கிறது. மற்ற மதஸ்தர்கள் அவனைத் தங்களிடையே வசிக்கச் சம்மதிக்காவிட்டால் அவர்களுடைய ஆத்ம நம்பிக்கையிலும் ஏதோ தவறு இருக்கிறது. இரண்டு பேருடைய நன்மைக்காகவும் ஆத்ம நம்பிக்கையை பதிதாகக் கண்டு பிடித்தாக வேண்டும்.

காந்தியடிகள் இப்பொழுது கிழக்கு வங்காளத்தில் தேடிக்கொண்டிருப்பது இதுதான். பிறர் பாதுகாப்பிருந்தால்தான் உயிர் வாழ முடியும் என்ற எண்ணத்தை ஜனங்களிடமிருந்து ஒழித்துத் தீர வேண்டும்.

எந்தச்சமயத்திலும தங்களைப் பாதுகாக்கக் கூடிய சக்தி தங்களிடமே இருக்கிறது என்ற எண்ணத்தை உண்டாக்க வேண்டும். அந்த எண்ணம் உண்டாய் விட்டால் அவர்கள் எதைத் தங்கள் புனிதமான பொக்கிஷமாக எண்ணுகிறார்களோ, அதை நிலைநாட்டுவதற்காக எவ்விதத் தியாகம் செய்யவும் தயாராய் இருப்பார்கள்.

''எந்த நிமிஷமும் உயிரைத் துறக்க சித்தமாயிருக்கும் மன உறுதி யுடையவன் உலக முழுவதும் எதிர்த்து வந்தாலும் வென்றுவிட முடியும்'' என்று ரொமைன் ரோலண்டு என்னும் பிரஞ்சு பெரியார் கூறுகின்றார்.

நான் கலாசாலையில் படித்த பொழுது அடிக்கடி கேட்ட ஒரு கீதத்தின் பல்லவி என்னுடைய மனத்தில் இன்னும் அழியாமல் இருந்து கொண்டிருக்கிறது. அது வருமாறு:—

நியாயத்தைப் பேசத் துணிவு கொள்.

தனியே நிற்கத் துணிவு கொள்.

உறுதியான லக்ஷியம் உடையவனா யிருக்கத் துணிவு கொள்.

அந்த லக்ஷியத்தை அனைவருக்கும் அறிவிக்கத் துணிவு கொள்.

கே. ஜி. எம்.

## பயத்தை ஒழியுங்கள்.

ஸ்ரீ ராம் பூரில் காந்தியடிகள் 24-ம் தேதி மாலை நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் அதிகமான ஜனங்கள் வந்திருந்தார்கள். சிலர் பக்கத்துக் கிராமங்களிலிருந்து பஜனை கோஷ்டியாக வந்திருந்தார்கள் சிலர் சிட்டகாங், சில்ஹெத், ஆகிய இடங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் கீதம் பாடிய பின் காந்தியடிகள் கூறியதாவது:—

''அக்கிரமிகள் கைது செய்யப் படாமலிருப்பதால் ஜனங்கள் பயத்தை நீக்க முடியாமலிருப்பதாக எனக்கு கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது உண்மையாயிருக்கலாம். ஆயினும் ஜனங்கள் மனோதையரித்தைக் கொண்டுத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போக வேண்டு மென்றே யோசனை கூறு கிறேன்.

வீடுகளை மறுபடியும் கட்டு வதற்கு சர்க்கார் கொடுப்பதாகச் சொல்லும் தொகைகள் சாதாரணமான குடிசை கட்டுவதற்குக் கூட போதாதென்று பலர் கூறுகிறார்கள். ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போக வேண்டு மென்று சர்க்கார் விரும்புவதால் அவர்கள் போதுமான அளவு உதவி செய்வார்கள் என்றே நம்புகிறேன். ஆயினும் அகதிகள் சர்க்காரை எதிர் பாராமல் சமாளித்துக் கொள்ள வேண்டு மென்பதே என்னுடை விருப்பம். தனக்காக எதையும் இரவாதவரையும் பாதுகாப்பிற்காக பிறர் உதவியை தேடாதவரையும் நான் கௌரவிப்பேன். என்னை நம்பினால் ஒரு ஒடிந்த கழியை பிடித்துக் கொண்டு நடப்பது போலவே இருக்கும். உண்மையான பாது காப்பு தங்களிடத்திலுள்ள ஆத்ம பலத்தை நம்புவதே யாகும். அதாவது கடவுளை நம்புவது தான் பயனுள்ள பாதுகாப்பு. அடக்கு முறைக்குப் பணியும் பொழுது தான் அடக்கு முறை செழித்து வளரும் என்ற ரகசியத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களுடைய ஹிருதயத்திலிருந்து பயத்தை ஒழித்து விடுவீர்களானால் உங்களை யாராலும் நசுக்க முடியாது. உங்களை நசுக்க யாரும் விரும்பவும் மாட்டார்கள்.''

அடிமையாயிருந்தும் அதை அறியாதவனைப் போன்ற பெரிய அடிமை கிடையாது—கதே

## கிறிஸ்து ஜயந்தி.

டிஸம்பர் 25-ந்தேதி கிறிஸ்து பிறந்த தினம். அன்று மகாத்மா காந்தியடிகளுக்குப் பல தேசங்களிலிருந்து வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்து சேர்ந்தன.

ராஜகுமாரி அமிர்தகௌரி பைபிளிலிருந்து பல சாரமான பகுதிகளை தனியாக எடுத்து எழுதி இருந்த புஸ்தகத்தை பல வருஷங்களுக்கு முன் காந்தியடிகளுக்கு அனுப்பி இருந்தார். அதிலிருந்து சில பகுதிகளை ஆசிரியர் நிர்மல் போஸ் காந்தியடிகளிடம் வாசித்தார்.

அதன் பின் காந்தியடிகள் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதாவது :—

"சகல மதங்களும் சரிசமானமான அந்தஸ்து உடையவை என்பது என்னுடைய நம்பிக்கை. கிறிஸ்தவர்கள் ஏசு கிறிஸ்துவை தங்களுக்கு மட்டுமே சொந்தமென்று எண்ணிக் கொள்ளலாம். ஆனால் அவருடைய போதனைகள் உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் சொந்தமாயிருப்பதால் அவரை எந்தச் சமுகத்தையும் சேர்ந்தவரென்று சொல்ல முடியாது."

## முஸ்லிம் வீட்டுக்கு விஜயம்.

ஸ்ரீ ராம்பூரிலுள்ள ஒரு முஸ்லிம் வீட்டிலுள்ள கோஷா அனுஷ்டிக்கும் முஸ்லிம் பெண்கள் காந்தியடிகளை தரிசிக்க விரும்பினார்கள். அந்த விஷயத்தைக் கேட்டதும் காந்தியடிகள் அவர்களுடைய வீட்டுக்கு 26-ம் தேதி சென்று வந்தார். போகும் வழியில் அவர் ஒரு கிராமப்பாடசாலைக்குள் போய் அங்குள்ள குழந்தைகளிடம் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

கிறிஸ்தவ நண்பர்கள் சேவா சங்கத்தைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் காந்தியடிகளைச் சந்தித்து அவரிடம் விளையாட்டு சீட்டுக்கட்டு ஒன்று, சிகரட் கட்டு ஒன்று, முகக்ஷவர செட் ஒன்று, சில துவாலைகள், ஒரு சீப்பு, இன்னும் சில சிறு பொருள்கள் ஆகியவற்றைக் காணிக்கையாக கொடுத்தார்கள். காந்தியடிகள் சீப்பைக் கையில் எடுத்துக் கொண்டு "இந்த சீப்பை உபயோகிப்பதற்காக நான் ரோமத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் அல்லவா" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

அதன் பின் டக்கா நகரத்திலுள்ள சக்தி மடத்தைச் சேர்ந்த சுவாமி ஞானனந்தர் வந்து காந்தியடிகளிடம் பேசிக் கொண்டிருந்தார். காந்தியடிகள் கூறியதாவது :—

"என்னுடைய நோக்கம் நிறைவேறுவதாக அறிகுறி எதுவும் தோன்றவில்லை. ஆனால் அஹிம்சையானது எதிர்பாரத விதங்களில் பயன் காட்டக் கூடியதாகும். உங்களுடைய தொண்டர்கள் பலாத்காரத்தை அறவே ஒழித்துவிட வேண்டும். நீங்கள் டக்காவைச் சுற்றி யுள்ள கிராமங்களில் பட்டினியாயிருக்கும் மக்களுக்கு உணவு கொடுக்கும் வேலையையும் ஹிந்து மதத்தை நொண்டியாய் வைத்திருக்கும் தீண்டாமையை ஒழிக்கும் வேலையையும் மேற்கொள்ள வேண்டும்."

## நான் பெறப்போகும் பட்டம்

காந்தியடிகள் 26-ம் தேதி மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் தாம் செய்யப்போகும் சோதனையை குறித்து பேசினார். அவர் செய்யப்போகும் சோதனையாதெனில் ஸ்ரீ ராம்பூரிலிருந்து புறப்பட்டு கிழக்கு வங்காளத்தில் கால்நடையாகப் பிரயாணம் செய்து ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஒற்றுமை யுண்டாக்குவதேயாகும்.

காந்தியடிகள் அக்கிரமங்கள் நடந்த பகுதியில் தங்கி இருப்பதால் நல்ல பலன் கிடைத்து வருவதாகத் தெரிகிறது. அநேக ஊர்களில் முஸ்லிம் ஜனங்கள் முஸ்லிம் அக்கிரமிகளை தண்டிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் ஒரு முஸ்லிம் ஒரு ஹிந்துவினுடைய வயலிலிருந்து நெல்லைத் திருடிவிட்டார். அதற்காக அவரை பெரிய அபராதம் செலுத்தும்படி செய்திருக்கிறார்கள். இந்த விதமாக முஸ்லிம்கள் பல இடங்களில் ஹிந்துக்களுக்கு நம்பிக்கை வரும்படியாகச் செய்து வருவதாகத் தெரிகிறது.

காந்தியடிகள் செல்லும்பொழுது அவருடன் திரு. பரசுராமும், வங்காள மொழி பெயர்ப்பாளரான ஆசிரியர் நிர்மல் போஸும், ஒரு முஸ்லிம் நண்பரும் செல்வார்கள் என்று தெரிகிறது.

காந்தியடிகள் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டியதுதான் என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமுமில்லை. ஆனால் இந்தியர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளும் அளவு முட்டாள்களாக இருப்பார்களானால் வருங்காலத்தில் தேசத்தின் நிலைமை எப்படியிருக்குமென்பதை நான் கூற முடியும். ஐக்கிய நாட்டாருடைய ஆதிக்கத்தின் கீழ் வைக்கப்படும். அப்படியானால் இப்பொழுது ஒரு எஜமான் இருப்பதற்குப் பதிலாக பல எஜமானர்கள் ஏற்படுவார்கள். பரிபூர்ண சுதந்திரம் என்பதற்கு விடை கொடுத்து விடவேண்டியதுதான். இந்த உண்மையை இந்திய மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

நான் என்னுடைய வாழ்நாளில் இதுவரை செய்த சோதனைகளைவிட மிகப் பெரிய சோதனை ஒன்றை செய்யப் போகிறேன். இதுதான் அநேகமாக என்னுடைய இறுதிச் சோதனை. நான் பீ. ஏ. பட்டமோ எம். ஏ. பட்டமோ பெற்றவனல்லன். ஆனால் நான் நோவகாளியில் கொடுக்கப்போகும் பரீக்ஷையில் தேறினால் வாழ்வில் பெறக்கூடிய உயர்ந்த பட்டத்தை அதாவது என்னுடைய எம். ஏ. பட்டத்தைப் பெற்றவனாவேன். இந்தப் பரிக்ஷையில் வெற்றி பெற்றால் என்னுடைய பட்டத்தையும் பரிசுகளையும் இந்த நாட்டிலுள்ள நாற்பது கோடி மக்களுக்கும் சொந்த மாக்குவேன்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பலர் நோவாகாளி ஜில்லாவில் சேவை செய்வதற்கு வர விரும்புவதாக எழுதி இருக்கிறார்கள். முஸ்லிம் லீகர்கள், அயல் இடங்களி லிருந்து தொண்டர்கள் வருவதைக் கண்டு காந்தி யடிகள் ஹிந்துக்களைத் திரட்டுவதற்காகவே, அவர்களைத் தருவிக்கிறார் என்றும் அதனால் சமுக ஒற்றுமை ஏற்படுவது தடைப்படுகிறது என்றும் குறை கூறுகிறார்கள்.

நான் முஸ்லிம்களின் பகைவனல்ல நண்பனே என்று என்னுடைய செயல்கள்மூலம் வங்காளத்தின் மந்திரிகளுக்கு நிரூபித்துக் காட்ட ஆவலுடையவனாக இருக்கிறேன். என்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நான் மட்டும் தனியாக சுற்றுப் பிரயாணம் செய்தால் போதுமானது. அயல் இடங்களிலிருந்து தொண்டர்கள் வருவதும் யோசனை கேட்பதும் ஏற்கெனவே சிக்கலாக இருக்கும் நிலைமையை அதிகச் சிக்கலாக ஆக்குகின்றதே தவிர சிக்கலைப் போக்குவதற்கு உதவி செய்வதாக இல்லை. நோவாகாளிக்கு வந்து சேவை செய்ய விரும்புகிறவர்

களுக்கு உண்மையாகவே அந்த ஆசை இருக்குமானால் அவர்கள் தங்கள் வேலைத் திட்டத்தை வங்காள மந்திரிகளிடம் காட்டி அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அத்துடன் அந்தத் திட்டப்படி செய்வதற்கு எழுத்து மூலம் அனுமதி பெறவும் வேண்டும். அக்கிரமங்கள் நடந்த பிரதேசங்களிலுள்ள அகதிகளுக்கு வைத்திய உதவி செய்வதற்காக பம்பாயிலிருந்து சில டாக்டர்கள், வந்திருக்கிறார்கள். அவர்களிடம் நேற்று இந்த யோசனையைத்தான் சொன்னேன். நோவாகாளிக்கு வந்து வேலை செய்ய விரும்புவதாக கடிதங்களும், தந்திகளும் அனுப்பியுள்ளவர்கள். தங்கள் சொந்த இடங்களில் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவதே இங்குள்ள ஜனங்களுக்கு சேவை செய்ததாகும். நோவகாளியில் எந்த விதமாக சேவை செய்ய வேண்டுமென்று சிலர் யோசனை கேட்கிறார்கள். நானே இருட்டில்தான் தடவிக் கொண்டிருக்கிறேன். ஆதலால் வழி தெரியாத குருடன் எப்படி வழி காட்ட முடியும்.

நோவாகாளிக்கு வந்து சேவை செய்ய விரும்புகிறவர்களிடம் "தேவையானால் நான் கிழக்கு வங்காளத்தை விட்டு போன பிறகும் நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் இங்கேயே இருந்து சேவை செய்வீர்களா ?" என்று கேட்டேன். அவர்கள் அதற்குப் பதில் சொல்லத் தயங்கினார்கள். அவர்களை நான் பார்த்துப் பாராட்ட வேண்டுமென்பதற்காகவே இங்கு வந்து சேவை செய்ய விரும்புகிறார்கள் என்றும் சேவைக்காகவே சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு இல்லை என்றும் அதிலிருந்து தெளிவாகின்றது.

## "என் நோக்கம்"

காந்தியடிகள் 23-ம் தேதி மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் சுமார் 20 நிமிஷநேரம் பேசினார். கிழக்கு வங்காளத்திற்கு வந்தபின் நீண்டநேரம் பேசிய பேச்சு இதுதான். அவர் பேச்சின் சாராம்சமாவது :—

"பீஹார் மாகாண முஸ்லிம்லீக் தயாரித்துள்ள அறிக்கையின் பிரதியொன்று இரண்டு நாட்களுக்கு முன் என்னிடம் வந்து சேர்ந்தது. அதில் அவர்கள் பீஹார் கலவரங்களைப் பற்றி விவரித்திருக்கிறார்கள். அது தவிர இன்னும் பல கடிதங்களும் தந்திகளும் எனக்கு வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் என்னை பீஹாருக்கு போகும்படியாக வற்புறுத்துகின்றன.

நான் பீஹார் மாகாண முஸ்லிம்லீகின் அறிக்கையைப் படித்தேன். அதில் கூறியுள்ள விஷயங்களில் பாதியேனும் உண்மையாயிருக்குமானால் என்னால் உயிரை வைத்துக்கொண்டிருக்க முடியாது. பீஹாரில் நடந்த சம்பவங்கள் மனிதப்பண்புக்கு விரோதமானது என்பதும் பரிபூர்ணமாகக் கண்டிக்கத்தகுந்தவை என்பதும் உண்மையே. ஆனால் பீஹாரில் சமாதான நிலைமை பூர்ணமாக ஏற்பட்டுவிட்டதென்றும் லீக் அறிக்கையில் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் மிகைப்படுத்தப் பட்டிருக்கின்றன என்றும் எனக்கு நம்பத்தகுந்த இடத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

பீஹாரில் ஹிந்து முஸ்லிம் வகுப்புகளின் இடையே சமாதானத்தை உண்டுபண்ணுவதற்காக நான் அங்கே போகவேண்டிய அவசியமில்லை. அங்கே காங்கிரஸ் சர்க்கார் நடந்துகொண்டிருக்கிறது. சமாதான நிலைமையை உடனடியாகச் செய்யவேண்டுமென்று நான் பீஹாரிலுள்ள காங்கிரஸ் தலைவர்களிடம் இங்கிருந்தே கேட்டுக் கொள்ள முடியும். அந்த விதமாகச் செய்துகொண்டுதானிருக்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன் தேச முழுவதும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போவதாக கிளப்பிவிடப்பட்டிருக்கும் வதந்தியை பொய்யென்று மறுத்துக் கூறினேன். உண்மையான சத்தியாக்கிரகி தன்னுடைய திட்டங்களை எதிர் கட்சியினிடம் சொல்லாமல் மறைத்து வைக்க மாட்டான். மறைத்து வைத்தால் அது சத்தியாக்கிரக மாகாது. துராக்கிரகமேயாகும்.

இப்பொழுது வேறொரு குற்றச்சாட்டுக் கூறப்படுகிறது. நான் இங்கே இருப்பது சர்க்கார் ஒற்றுமை ஏற்படுத்துவதற்காக வகுத்திருக்கும் திட்டத்திற்குத் தடையாக இருப்பதாக கூறுகிறார்கள். வங்காள மந்திரிகளும் நோவகாளி ஜில்லா அதிகாரிகளும் என்னுடைய நண்பர்கள். நான் இருப்பது அவர்களுடைய வேலைக்குத் தடையாயிருக்குமானால் அவர்கள் அதை என்னிடம் சொல்லலாம். ஆனால் அதை யாரும் அப்படி என்னிடம் சொல்லவில்லை. நான் இருப்பது சர்க்கார் திட்டத்துக்கு உதவியாக இருப்பதாகவே கூறுகிறேன். இரண்டு வகுப்பாருக்கிடையிலும் மனமொத்த ஒற்றுமை ஏற்படுத்துவதற்காகவே நான் நோவகாளிக்கு வந்திருக்கிறேன். என்னுடைய முயற்சி இங்கே வெற்றி பெறுமானால் அது தேச முழுவதற்கும் மிகுந்த பலன் அளிக்கும்.

வங்காள மந்திரிகளை கேலிக்குள்ளாக்குவதற்காகவே நான் இங்கே தங்கியிருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். என்னுடைய நோக்கம் அதுவன்று. வங்காள சர்க்காரைத் திருத்துவதற்காக ஏன் உண்ணாவிரதமிருக்கவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். நான் உண்ணாவிரதமிருந்தால் அது வங்காளத்துக்கும் வங்காள மந்திரி சபைக்கும் இழிவையுண்டாக்கும். அத்தகைய காரியத்தைச் செய்ய ஒரு நாளும் விரும்ப மாட்டேன். நான் நோவாகாளிக்கு வந்திருப்பதன் நோக்கமெல்லாம் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவது ஒன்றுதான்."

## என் சகோதரன்

ஆங்கில நாட்டு அறிஞர்களில் ஒருவராகிய ஸ்மைல்ஸ் என்பவர் "தன் உதவி" என்ற பெயரால் ஒரு உபயோககரமான புஸ்தகம் எழுதி இருக்கிறார். அதைப் படியாத ஆங்கிலேயர் யாரும் இருக்க மாட்டார்கள். அவர் அந்த நூலில் கூறுவதாவது :—

வேல்ஸ் நாட்டின் எல்லைப் புறத்தில் ஒரு கிருஸ்தவ போதகர் கீழ்க்கண்டவாறு சொன்னார் :—

"நான் ஒருநாள் அதிகாலையில் மலைக்குச் சென்றேன். அப்பொழுது மூடுபனி பெய்து கொண்டிருந்தது. ஏதோ ஒன்று நடமாடுவதைக் கண்டேன். அது பார்ப்பதற்கு விநோதமாயிருந்ததால் ஏதேனும் பூதமோ என்று எண்ணினேன். ஆனால் அதன் அருகே போனபோது மனிதனென்று கண்டேன், இறுதியில் அதனிடம் போய் சேரும்பொழுது அவன் என் சகோதரனாய் இருந்தான்."


## தமிழ் ஹரிஜன் சந்தா விபரம்

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 7 0 0 |
| ஆறு மாத சந்தா | ரூ. 3 8 0 |

தமிழ் ஹரிஜன்

தியாகராய நகர் :: சென்னை.


அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை,
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராய நகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை